# இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்கள வெளியீடுகளை எண்ணிமவாக்கல் செயற்றிட்டம் - 2024

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்கள வெளியீடுகளை எண்ணிமவாக்கல் செயற்றிட்டம் |
| செயற்றிட்ட எண் | - |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | 2024 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | |
| செயற்றிட்டச் செலவுகள் | LKR 4,846,268 (மொத்தப் பாதீட்டுத் தொகை)<br>LKR 1,089,388 (நூலக நிறுவனம்)<br>LKR 3,756,880 (செயற்றிட்ட நன்கொடையாளர் ) |

நூலக நிறுவனம் அறிமுகம்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. மேலும் பல்வேறு செயற்றிட்டங்கள் மூலமும் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த அணுக்கத்தில் வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களமானது, இலங்கையில் இந்து மத விவகாரங்கள் தொடர்பான அனைத்து விடயங்களுக்கும் பொறுப்பான திணைக்களமாகச் செயற்படும் வகையில், 1985 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் திகதியின் (1985 / 123-12) என்ற இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைவாக, 1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாந் திகதி அதிகாரப்பூர்வமாக உருவாக்கப்பட்டது.

இத் திணைக்களமானது ஒழுக்கப் பண்புகள் மற்றும் சமய விழுமியங்களின் வழி நடக்க இந்துச் சிறார்களுக்கிடையே இந்துசமயக் கல்வியை ஊக்குவித்தல் , இந்துசமயத்தையும் கலாசாரத்தையும் அபிவிருத்தி செய்து பேணுவதற்காக இந்துசமய நடைமுறைகளை பேணுதல், இந்துசமய கலாசார ஆராய்ச்சியை அபிவிருத்தி செய்தலும் இந்துசமய, கலை மற்றும் கட்டிடக்கலை தொடர்பான உயர்ந்த எண்ணத்தினை பொதுமக்களிடையே பரப்புதல், தமிழ் கலைஞர்களின் பங்களிப்புகளின் மூலம் தமிழ் கலைகளைப் பாதுகாத்து மேம்படுத்துதல் மற்றும் எதிர்கால தலைமுறையினருக்கு கையளித்தல் என்பவற்றுடன் இந்து மரபுகளை அடிப்படையாகக் கொண்ட கலாச்சார, சமூக, மத மற்றும் ஆன்மீக வளர்ச்சி நடவடிக்கைகளுக்காக இந்து கோவில்கள் மற்றும் இந்து அமைப்புகளை ஊக்குவித்தலையும் குறிக்கோளாக கொண்டு செயற்பட்டு வருகின்றது

செயற்றிட்டச் சுருக்கம்

எமது நிறுவனமானது பல்வேறு செயற்றிட்டங்களுக்கூடாக ஆவணப்படுத்தல் செயற்பாட்டில் ஈடுபட்டுவருகின்றது. அந்த வகையில் இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களமானது கிட்டத்தட்ட 500 ற்கும் மேற்பட்ட ஆவணங்களை இதுவரை வெளியிட்டுள்ளது. அவற்றை முறையான வகைப்படுத்தல்களோடு எண்ணிமப்படுத்திப் பாதுகாத்தல் இன்றைய கால கட்டத்தில் மிகவும் அவசியமான தேவைப்பாடாக உள்ளது.

மேலும் இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து அதனது வெளியீடுகளை ஆவணப்படுத்துவதுடன் திறந்த அணுக்கத்தில் வலைத்தளத்தில் பதிவு செய்வதற்காக இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவிருக்கின்றது. இம்முயற்சியானது தமிழ் கலைஞர்களையும் தமிழ் கலைகளையும் ஊக்குவிப்பதோடு இந்து சமயக் கல்வி சார்ந்த கற்றல் மற்றும் ஆய்வு நோக்கங்களுக்கும் உதவியளிக்கக்கூடியதாக அமையும். மேலும் இவ்வெளியீடுகளுக்கென நூலக நிறுவனத்தின் வலைத்தளத்தில் வலைவாசல் ஒன்றினைப் பேணுவதன் மூலம் இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் அனைத்து வெளியீடுகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இலக்கு

இலங்கையில் உள்ள இந்து தமிழ் மக்களின் கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்கும் வகையில், இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் 500ற்கும் மேற்பட்ட ஆவணங்கள் மற்றும் 200,000 பக்கங்களை இரண்டு வருடம் மற்றும் ஆறு மாத காலத்தினுள் எண்ணிமப்படுத்தி பொருத்தமான வகைப்பாடுகளுடன் முகப்பில் இணைத்தல்

நோக்கங்கள்

- இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் வெளியீடுகளை பொருத்தமான வகைப்படுத்தல்களுடன் எண்ணிமப்படுத்தல்
- நூலக வலைவாசலில் இச் செயற்றிட்டத்திற்கான முகப்பொன்றினை உருவாக்கி இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் அனைத்து வெளியீடுகளையும் ஒரே பார்வையில் கிடைக்கச்செய்தல்
- எண்ணிமப்படுத்தப்படும் ஆவணங்களின் மூலப்பிரதியொன்றினை இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்திற்க்கு வழங்குதல்

செயற்பாடுகள்

1. ஆவணங்களைச் சேகரித்தல்: இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் வெளியீடுகளை பெற்றுக்கொள்ளல்
2. எண்ணிமப்படுத்தல்: ஆவணங்களுக்குப் பொருத்தமான மின்வருடிகளை பயன்படுத்தி நூலக நிறுவனத்தால் சர்வதேச நியமங்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட தரத்தில் எண்ணிமப்படுத்தல்
3. அணுக்கப்படுத்தல்: எண்ணிமப்படுத்தப்பட்ட ஆவணங்களைச் சரிபார்த்து உரிய விபரத் தரவுகளுடன் இணையத்தில் கிடைக்கச் செய்தல்
4. நிறைவுசெய்தல்: எண்ணிமப்படுத்த ஆவணங்களைப் பிரதியெடுத்துக் காப்புப்படிகளை உருவாக்குதலும் மூல ஆவணங்களை உரிமையாளர்களிடம் மீள வழங்குதல்.
5. செயற்றிட்ட முகப்பினை உருவாக்கல் : செயற்றிட்டத்துடன் தொடர்புடைய அனைத்து ஆவணங்களும் ஒரே இடத்தில் இணைக்கப்படுவதற்கான முகப்பினை உருவாக்க்குதல்.

இடர்முகாமை

- செயற்றிட்டப்பணியாளருக்கான எண்ணிமப்படுத்தல் பயிற்சியை வழங்குதல் மூலம் இலக்கினை திட்டமிட்ட படி அடையலாம்.
- செயற்றிட்ட ஆவணங்களை எண்ணிமப்படுத்தலுக்குரிய மின்வருடிகளை உரிய நேரத்தில் பெற்றுக்கொள்வது சவாலாக அமையலாம். ஆகவே ஆவணங்களின் எண்ணிக்கை மற்றும் தரத்திற்கமைய பொருத்தமான மின்வருடிகள் மற்றும் கணனி என்வற்றை உரிய நேரத்தில் கிடைக்கப்பெறும் போது செயற்றிட்டத்தை தடையின்றி முன்னெத்துச் செல்லலாம்.
- தொழில்நுட்பம் சார்ந்த விடயங்களில் சவால்கள் ஏற்படலாம் ஆகையால் எண்ணிமப்படுத்தப்பட்ட ஆவணங்கள் தரத்தினை வாரம் ஒருமுறை மீள் சரி பார்த்து உறுதிப்படுத்தல்.

எதிர்பார்க்கப்படும் அடைவுகள்

இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் 500ற்கும் மேற்பட்ட ஆவணங்கள் மற்றும் 200,000 பக்கங்களை ஒரு வருடம் மற்றும் ஆறு மாத காலத்தினுள் எண்ணிமப்படுத்தி பொருத்தமான வகைப்பாடுகளுடன் முகப்பில் இணைத்தல் .

செயற்பாட்டு அட்டவணை

| இல | செயற்பாடுகள் | மாதங்கள் | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | முன்மொழிவு மற்றும் ஆரம்பகட்ட வேலைகள் | x | | | | | | | | | | | | | | | | | |
| 2 | செயற்றிட்ட முகப்பை உருவாக்குதல் | | | | | | | | | | | | | | | | | | |
| 3 | ஆவணங்களை சேகரித்தல், | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x |
| 4 | பட்டியலிடுதல் | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | |
| 5 | மின்வருடுதல் | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x |
| 6 | எண்ணிமப்படுத்தல், மீதரவு இற்றைப்படுத்தல் மற்றும் காப்புப்படி எடுத்தல் | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x |
| 7 | வலைத்தளத்தில் இணைத்தல். | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x |
| 8 | இரவல் பெறப்பட்ட ஆவணங்களை மீள ஒப்படைத்தல். | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x |
| 9 | அறிக்கை சமர்ப்பித்தல் | | | | | | x | | | | | | x | | | | | | x |

செயற்றிட்டப்பாதீடு

| Details of Expenditure | Unit cost | Unit | Quantity | Total | Noolaham Foundation Contribution | Donor Contribution |
|---|---|---|---|---|---|---|
| **Human Resource** | | | | **2,473,128** | **261,648** | **2,211,480** |
| Digital Library Officer - Quality Assurance | 42,300 | Staff | 18 | 761,400 | | 761,400 |
| Digital Preservation Officer 2 Numbers | 40,280 | Staff | 36 | 1,450,080 | | 1,450,080 |
| Programme Manager 10% | 8,588 | Staff | 18 | 154,584 | 154,584 | |
| Digital Library and preservation Manager 10% | 5,948 | Staff | 18 | 107,064 | 107,064 | |
| **Equipments** | | | | **1,835,400** | **290,000** | **1,545,400** |
| A4 Scanner | 255,600 | Nos | 1 | 255,600 | | 255,600 |
| Camera | 279,900 | Nos | 1 | 279,900 | | 279,900 |
| Hard disk | 55,450 | Nos | 2 | 110,900 | | 110,900 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Computer | 290,000 | Nos | 3 | 870,000 | 290,000 | 580,000 |
| Scaled tripot | 280,000 | Nos | 1 | 280,000 | | 280,000 |
| Battery | 12,000 | Nos | 2 | 24,000 | | 24,000 |
| Memory card | 15,000 | Nos | 1 | 15,000 | | 15,000 |
| **Sub Total** | | | | **4,308,528** | **551,648** | **3,756,880** |
| 12% Admin Cost | | | | 537,740 | 537,740 | |
| **Grant Total** | | | | **4,846,268** | **1,089,388** | **3,756,880** |